# முதல்வருக்கு வழிநெடுகிலும் உற்சாக வரவேற்பு! புகைப்படம் எடுத்து மகிழ்ந்த சிறார்கள்!

# உதகையில் 127-வது மலர்க் காட்சி! முதல்வர் திறந்து வைத்து அரங்குகளை கண்டு ரசித்தார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.5.2025) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127வது மலர்க்காட்சி தொடக்க விழாவில் கலந்துகொள்ள செல்லும் வழியில் பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, சிறுவர், சிறுமியர்களுக்கு இனிப்புகளை வழங்கி, அவர்களுடன் உரையாடினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.5.2025) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127வது மலர்க்காட்சியை தொடங்கி வைத்து, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.5.2025) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127வது மலர்க்காட்சியை தொடங்கி வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை – உழவர் நலத்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.5.2025) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127வது மலர்க்காட்சி தொடக்க விழாவில் கலந்துகொள்ள செல்லும் வழியில் இஸ்லாமியர்கள் அளித்த உற்சாக வரவேற்பு.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.5.2025) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127வது மலர்க்காட்சி தொடக்க விழாவில் கலந்துகொள்ள செல்லும் வழியில் பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பு.

### கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

## புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை, மே 17 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர்கே.கே.செல்லபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் வருகின்ற 19.05.2025 திங்கள்கிழமை காலை 9 மணியளவில் புதுக்கோட்டை லேணா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் கழக முதன்மைக் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சருமான கே.என்.நேரு கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை யாற்றுகிறார். மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமை வகிக்கிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், இயற்கை வளங்கள் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகாமீனாட்சிசுந்தரம், புதுக்கோட்டை விஜயா, த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி. என்.மணி, சுப.சரவணன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன்

கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க. மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, கீரை.தமிழ்ராஜா, சு.சண்முகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுகளில் தொகுதி பொறுப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் பணி சம்பந்தமாக

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் "தளபதி" ரத்ததான இயக்கம் சார்பில்

## கோவை அரசு மருத்துவமனைக்கு ரத்த தானம் வழங்கும் முகாம்!

### மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!



கோவை, மே 16 -

கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் "தளபதி" இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு "இரத்த தானம் வழங்கும் முகாம்" நடைபெற உள்ளது என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

திராவிட சூரியன், திராவிட மாடல் நாயகன், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், கழகத் தலைவர், இந்தியாவின் நம்பர் 1 தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் "தளபதி" இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு "இரத்த தானம் வழங்கும் முகாம்" இன்று (17.05.2025 - சனிக்கிழமை) காலை 8.00 மணி முதல், மதியம் 1.00 மணி வரை, வரதராஜபுரம் சாய் விவாகா மகாலில் நடைபெற உள்ளது.

இம்முகாமில் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

இம்முகாமில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி பி.ராஜ்குமார், கோயமுத்தூர் மாநகராட்சி மேயர் கே.ரங்கநாயகி ராமசந்திரன் உள்பட மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட்டச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள் கழகத் தொண்டர்கள், BLA2 பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், இலுப்பையூர் ஊராட்சி, பொய்யாதநல்லூர் கிராமத்தில் ஊராட்சிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசுத் துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.




தஞ்சை வடக்கு மாவட்டம், மேலக்காட்டூரில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஏற்பாட்டில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கிரிக்கெட் போட்டியில் முதலிடம் பெற்ற அணிக்கு தமிழ்நாடு அரசு பாடநூல் வாரிய தலைவரும், கழக கொள்கைப் பரப்புச் செயலாளருமான திண்டுக்கல் ஐ.லியோனி பரிசுகளை வழங்கினார். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உள்ளனர்.